● முத்தமிழ் விழாவைக்காண

## குடாநாட்டில் இருந்து மக்கள் திரண்டு வந்தனர்

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் முத்தமிழ் விழா 9ஆம் நாள் நிகழ்ச்சிகள் நேற்று முற்றவெளியில் விமரிசையாக ஆரம்பமாகின. இவ்விழாவை திவச அரசியல் பொறுப்பாளர் சுதா மகிகளை விளக்கேற்றி தொடக்கி வைத்தார். இதனையடுத்து மங்கள இசை இடம்பெற்றது. மகளிர் முன்னணியைச்சேர்ந்த ஆர்த்தி விழாவுக்கு தலைமை வகிக்க விழாவின் சிறப்புரை இடம்பெற்றது. சொல்லை முன்னெடுப்பு பொறுப்பாளர் பரா, மகளிர் முன்னணியைச்சேர்ந்த பாரதி ஆகியோர் உரையாற்றினார்கள். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சிறப்புரையும் இடம்பெற்றது. போக்குவரவு வசதி இன்றியும் விழாவைக்காண்பதற்கு குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திரண்டுவந்திருந்தனர். முற்றவெளி ஜனசமுத்திரமாக காட்சியளித்தது. மாணவர் இயக்கத்தினால் நிறுவப்பட்ட தமிழீழ பிரதேசமும் அதில் இராணுவ முகாம்களும் —04 ஆம் பக்கம் பார்க்க

மக்களின் நான்கு
விலை ரூபா:- 4 : 50

# முரசொலி

முரசு 05 ஒலி 200 பிரசோற்பத்தி ஆனி 02 (16-06-1991) ஞாயிறு

# விடுதலையை நேசிப்பவர்களே இந்த மண்ணில் தங்கியுள்ளனர்

## முத்தமிழ் விழாவில் பரா பெருமிதம்

இப்போது தொடர்ந்தும் இங்கு தங்கியிருந்து எமக்கு உதவியாக இருக்கும் பொதுமக்கள் இந்த மண்மீதும். போராட்டத்தின் மீதும் பற்றுக் கொண்டிருப்பதாலேயே என்பதை நாம் உணர்கிறோம்.

இவ்வாறு நேற்று மாலை முற்றவெளியில் நடைபெற்ற ஒன்பதாவது முத்தமிழ் விழாவில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சொல்லை முன்னெடுப்பு பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

யாழ் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஆர்த்தி தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் பரா தொடர்ந்து பேசுகையில் இந்த மாபெரும் முத்தமிழ் விழாவில் மக்களும் போராளிகளும் இணைந்து நிற்பதோடு 600 க்கும் மேற்பட்ட கலைஞர்களும் விழா எடுப்பதற்காக கலைவடிவில் போராடு கிறார்கள்.

—04ஆம் பக்கம் பார்க்க

## முத்தமிழ்விழா முக்கிய நிகழ்ச்சி

### நாதஸ்வர இசை

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும் முத்தமிழ் விழாவின் இறுதி நாளான இன்று நாதஸ்வர மேதைகளான என். கே. பத்மநாதன், கே. ஆர். சுந்தரமூர்த்தி ஆகியோரின் நாதஸ்வர இசையும், திரு. என். ஆர், சின்னராசா, திரு வி. உதயசங்கர், திரு. ஆர். எஸ். சுதாகரன் ஆகியோரின் தவில் இசையும் இணைந்து முற்றவெளியில் இன்று இசை மழை பொழியும்.

### நாட்டிய நாடகம் தமிழிசை

முற்றுமுழுதாக பெண் போராளிகளாலேயே தயாரிக்கப்பட்டு நடிக்கப்படும் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் 'கொடியோரின் கொடுமை' நாட்டிய நாடகம் இன்றைய முத்தமிழ் விழாவில் அரங்கேறுகின்றது. தமிழீழத்தின் பிரபல பாடகர் சங்கீத பூசணம் திரு. பொன் சுந்தரலிங்கம் தமிழிசை பாடுகின்றார். இவர் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் வரைக்கும் தனது இசைவழத்தால் மக்களின் மனதைக் கொள்ளை கொண்டவர்.

### வரலாற்று நாடகம்

தமிழீழத்தின் தலை சிறந்த நாடக இயக்குநர் திரு. க. சிதம்பரநாதனின் நெறியாள்கையில் நாடக அரங்கக் கல்லூரி தயாரித்து வழங்கும் ''உயிர்த்து வந்த மனிதர் கூத்து'' என்ற நாடகம் இன்று மேடையேறுகின்றது. ஐம்பதுக்கு மேற்பட்ட கலைஞர்களின் கூட்டுத் தயாரிப்பான இந்த நாடகம் ஈழத்தமிழ் இனத்தின் போராட்ட வரலாற்றை சித்தரித்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது.

### புரட்சிப் பாடல்கள்

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினரின் வெளியீடான "இந்த மண் எங்களின் சொந்த மண்", வேங்கைகளின் விடுதலை வேதங்கள், பரணி பாடுவோம் ஆகிய மூன்று ஒலிப்பதிவு நாடாக்களிலுமுள்ள பாடல்களைப்பாடியசாந்தன், குலசிங்கம், வெளசியன், சியாமளா, குணமலர், ரசிகா, மிதிலா விவேகானந்தன் ஆகியோர் தாங்கள் பாடிய பாடல்களை மக்களின் முன் நேரடியாகப் பாடுகின்றார்கள். ஒலிப்பதிவுநாடாக்களில் இசை வாத்தியக் கருவிகளை இசைத்த கலைஞர்கள் அனைவரும் இந் நிகழ்ச்சியிலும் பங்கேற்கின்றனர். பாடல்களின் இசையமைப்பாளரான திரு. கண்ணன் இந்தப் போர்க்காலப் பாடல்களின் இசை நிகழ்ச்சியை நெறிப்படுத்துகின்றார்.

## ஷெல் தாக்குதல்

காரைநகர் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் பொன்னாலை

—04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

வீமன்காமப்பகுதியில் நடைபெற்ற எதிர்பாராத வெடி விபத்தில் தர்சன் (சி. பொன்ராசா, சித்தன்கேணி), வரோவின் (பரணீதரன், தன்னாலை) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

## திருமலையில் 14 தமிழர்கள் இராணுவத்தால் கைது

திருமலை கிளிவெட்டி முகாம் இராணுவத்தினர் மேன்காமம் என்ற கிராமத்தை சுற்றிவளைத்தனர். கடந்த புதன்கிழமை நடைபெற்ற இச்சுற்றிவளைப்பில் 14 தமிழ் மக்கள் அங்கு கைது செய்யப்பட்டு கிளிவெட்டி முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

## ஆனையிறவு, பலாலி முகாம் படையினர் ஷெல் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுமுன்தினம் இயக்கச்சி நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது. ஹெலிகப்டரில் இருந்தும் தாக்குதல் நடாத்தப்பட்டது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## எம், எஸ், எப். மருத்துவக் குழு அரசின் அறிக்கை குறித்து அதிர்ச்சி பணி தொடரும் என அறிவிப்பு

பிரெஞ் மருத்துவக் குழுவான எம். எஸ். எப் தொடர்ந்தும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பணியாற்றும் என அறிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 3 ஆம் திகதி இம் மருத்துவக் குழு மீது வவுனியாவில் வைத்து ஸ்ரீலங்கா விமானப் படை தாக்குதல் நடாத்தியதை

—04 ஆம் பக்கம் பார்க்க

## தேடப்பட்டு வந்த நளினி சென்னையில் கைதானார்

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த நளினி என்ற பெண் சென்னைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையருகே நளினி என்ற இப்பெண்ணும் முருகன் என்பவரும் பஸ்ஸில் சென்று கொண்டிருந்த போது கைதாகினர்.

சில தினங்களுக்கு முன்பாக கைதான தாயும் மகனும் கொடுத்த தகவலையடுத்தே இவர்கள் கைதானதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

## ஹோம் பினான்ஸ் லிமிட்டெட் நிவாரணத்துக்கு ஏற்பாடு

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஹோம்பினான்ஸ் கம்பனி வைப்பாளர்களுக்கு மத்திய வங்கியின் நிவாரணக் கொடுப்புத் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## பூவரசங்குளத்தில் கடும் மோதல்

வவுனியா செட்டிக்குளம் இராணுவ முகாமில் இருந்து மன்னார் வீதியில் பூவரசங்குளம் சந்தி நோக்கி வந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் மாலை முதல் நடைபெற்ற மோதலில் படையினருக்கு உதவியாக ஹெலி ஒன்றும் இரண்டு விமானங்களும் குண்டு வீச்சை நடாத்தின.

இம்மோதலின் போது இராணுவத்தினர் பலியானதாகவும் 12 பேர் காயமடைந்ததாகவும் கொழும்பு செய்திகள் தெரிவித்தன. (79-74-பி1)

**இன்று முத்தமிழ் விழா நிறைவு நாள்!**
**வீறு சேர்க்கும் இவ் வீரவிழாக்காண**
**தமிழ் ஈழத் தாயகமே திரண்டு வருக!**

(நிகழ்ச்சி நிரல் - பக்கம் 4)

★ தரமான போட்டோகொப்பி பிரதிகள்
✱ கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள்
★ பாஸ்போட், அடையாள அட்டைப் புகைப்படங்கள்
✱ கறுப்பு வெள்ளைப் படங்கள் 12'' × 10'' அளவு களில் பெரிதாக்குதல்

"சித்ராலயா"
இல. 351, கோவில் வீதி,
(நல்லூர் கோவில் பின் வீதியில், கம்பன்கோட்டம் முன்பாக)
நல்லூர்

நியாய விலையில் அழகு சாதனப் பொருள்கள் மற்றும் அலுமினியப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்

புவனேஸ்வரி அழகுசாதனப் பொருள் விற்பனை நிலையம்
42B, பருத்தித்துறை வீதி
(நல்லூர் சிவன் கோயில் முன்பாக)
நல்லூர்

★ தரமான ★ தெளிவான
போட்டோகொப்பி பிரதிகளுக்கும்
சகல றைக்கிளினிங் வேலைகளுக்கும்
நம்பிக்கையான ஸ்தாபனம்

சன்லைற் றைக்கிளினேர்ஸ்
23 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
கிளை:
இலங்கை செஞ்சிலுவைச்சங்க
யாழ் கிளை முன்பாக
கண்டி வீதி,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான ஓவிய வேலைகளுக்கும்
சிறப்பாக பெயர்ப்பலகைகள் செய்வதற்கும்

ஓவியர் லங்கா வின்
மேகலா கலையகம்
108/1, முதலாம் மாடி, துரைராசா கட்டடம்,
ஸ்ரான்லி வீதி
(மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்

புதிய தமிழுலகைத் தோற்றுவோம் — புவி
புகழக் கலைத்திறமை காட்டுவோம்
முதிய தலைகளெல்லாம் போற்றுவோம் — இன்று
முளைக்கும் அருஞ்சுவைகள் கூட்டுவோம்.

— கவியோகி சுத்தானந்த பாரதியார்

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம்

# முத்தமிழ் விழா மு

## முத்தமிழ் விழாவில் தெ

### எமது தேசியம் தனித்துவமானது

தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய கட்டமைப்பைக் கொண்டவர்கள். வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசிய மாக வாழ்ந்து வந்தோம். தேசியமாகவே வாழ்ந்து வருகிறோம் தேசியமாகவே வாழப்போகிறோம்.

எமது தேசியத்தை எதிரியானவன் ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் சரி; எமது தேசிய தனித்துவமானது என்றும் அழிக்க முடியாது. எதார்த்தமான அரசியல் உண்மை என்பதை நாம் உலகிற்குச் சதா பிரகடனஞ் செய்து கொண்டே இருப்போம். தேசிய விருது என நாம் வழங்கிக் கௌரவிப்பதும் இப்படியான ஒரு பிரகடனமே.

ஆண்டுதோறும் மாமனிதர்கள் தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்படுவார்கள். எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள். கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தேசிய போராட்டத்தில் மக்களின் பங்களிப்புச் சாதாரணமானதல்ல. அவர்களின் பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறை காயாக இருந்து விடுதலைப் போராட்டத்துக்குத் தோள் கொடுத்து வரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும், அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்கவேண்டும்.

நீண்ட காலமாகவே போராட்டத்தின் பெரும் சுமையைப் பொது மக்களே சுமந்து வருகிறார்கள். சாவும் அழிவும், பசியும், பட்டினியும், இரத்தமும் கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பத்தைச் சொற்களில் சித்திரிக்கமுடியாது.

உலகின் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொது மக்களே, ஏனென்றால் அடக்கு முறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விட, பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில் தான் அதீத அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒரு பொழுதும் வெற்றி அளிப்பதில்லை.

மக்களின் விடுதலை உணர்வை அடக்கு முறையால் அழித்து விடமுடியாது. உலக வரலாறு கூறும் உண்மை இது.





விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக, உயிர் மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

சிங்களப் பேரினவாத அடக்குமுறையானது எமது மக்களுக்குச் சாவையும் அழிவையும், தாங்கொணாத் துயரத்தையும் கொடுத்தபோதும் எல்லையில்லாத வகையில் தேசியப்பற்றுணர்வையும், சுதந்திரதாகத்தையும் தூண்டி விட்டிருக்கிறது. தமிழரின் தேசிய ஆன்மாவை விழித்தெழச் செய்திருக்கின்றது.

இன்று நாம் கொண்டாடி வரும் இந்த முத்தமிழ்விழா எமது மக்களின் தேசிய எழுச்சியின் அபாரமான வெளிப்பாடென்றே சொல்லவேண்டும். போராட்டச் சூழலில் எல்லைகளில் எதிரிகளின் போர்முரசு கேட்கும் யுத்த காலத்தில், சமுத்திரம் போலத் திரண்டெழுந்து பல்லாயிரம் மக்கள் முத்தமிழ் விழாவில் பங்குகொள்கிறார்கள் என்றால், அது எமது மக்களின் திடசங்கற்பத்தை, உறுதிப்பாட்டை, சுதந்திர அறைகூவலைத் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இந்தச் சுதந்திர அறைகூவல் எமது எதிரியின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை. சிற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக் குரலைச் சிங்களத் தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்ய முடியாது. இலட்சியத்தால் ஒன்றுபட்டு, உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள். இந்த வரலாற்றின் படைப்பால் எமது தேசிய மண் ஒரு சுதந்திர பூமியாகப் பிறப்பெடுக்கும் என்பது திண்ணம்.

### சுதந்திரத்தின்

இந்த மண்ணில் ஓடும் இரத்தாற்றிற்கும் கண்ணீருக்கும் நடுவேதான் முத்தமிழ் விழா இன்று நடைபெறுகிறது. இந்த மண்ணை மீட்பதற்காக ஒவ்வொரு நாளும் எங்கோ ஒரு மூலையில் ஒரு போராளி மரணிக்கிறான். அவனின் இரத்தம் தோய்ந்த உடலைச் சுமந்தபடியே இந்த விழாவை நாம் நடத்துகிறோம். இதுவும் ஓர் யாகம், இதுவும் ஓர் போராட்டம். இந்த விழாவைக் கொண்டாடுவதால் நாம் பெருமை கொள்கிறோம்.

ஏனெனில், நெருக்குதல்களின் மூலம் எங்களை அடக்கி விடலாம் என்று நினைக்கும் ஆக்கிரமிப்பாளனுக்கு அந்த நெருக்குதல்களின் நடுவேயும் எங்களால் பாடமுடியும். எங்கள் தனித்துவங்களைப் பாதுகாக்க முடியும் என்பதை இந்த விழா தெளிவு படுத்தும்.

இன்று நடக்கும் இந்த முத்தமிழ் விழா இதுவரை நிக

### உலகத்துக்கே வழிக

இந்த முத்தமிழ் விழா தலைவர் பிரபாகரனினதும் பொது மக்களினதும் ஆசையின் நிமித்தமே உருவாக்கப் பட்டது நாம் ஒன்றுசேர்ந்து சாதிமத பேதமற்ற தமிழீழத்தை உருவாக்குவோம்.

நாம் பெற விரும்பும் விடுதலை இராணுவ ரீதியான தாகமாகிடும் அமையக்கூடாது. கலைபண்பாட்டு ரீதியாகவும் பெறப்பட வேண்டும். இதற்காக சாதி, மத பிரதேசவேறுபாடுகளை மறந்து போராட வேண்டும். நாம் தர்மத்தின் பக்கம், நீதியின் பக்கம், நியாயத்தின் பக்கம் நின்று போராடுகிறோம், காலங்காலமாக



சங்கத் தமிழ் முத்தமிழ் விழா இனிது நிறைவேற எமது நல்லாசிகள்

சாயி மருத்துவக் கல்லூரி
(மருத்துவக் கல்வி) தனியார் கல்வி நிலையம்

வர்ம சிகிச்சை [அக்குபங்சர்] நிலையம்,
இல. 6, பருத்தித்துறை வீதி, (1ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அதிபர்:
வைத்திய கலாநிதி வி. பி. சுந்தரராஜன்

# ரசொலி சிறப்பிதழ்

# றித்த வீர முத்துக்கள்

## பெருவிழா

றதது. தமிழர்களின் வர
ற்றிக் புதுமையான து.
ரம் நிறைந்ததொரு காலத்
ன் விடுதலையை, சுதந்தி
ந்தின் பெருமதியை இந்த
ழா வெளிப்படுத்திச் செல
ம்.


இந்த மண்ணின், இங்கு
ழும் மக்களின் வீரம்
றைந்த போராட்டத்தை
ம், தியாகங்களையும், வேத
களையும் பாடுவதற்கு -
லக்கியமாக்குவதற்கு இன்று
ம் தொடங்கியுள்ளோம்.
திய பரணிகளும் - பாடல்
ளும் எங்கள் தெருக்களிலெல்
ம் கேட்கத் தொடங்கியுள்
ன. எமது கலைவடிவங்கள்
போராட்டத்திற்குப் புதிய
ணாமங்களைச் சேர்க்கத்
தொடங்கியுள்ளன.

எமது மக்களின் தியாகங்
ளும், பங்களிப்புக்களும் எமது
போராளிகளின் வீரமும் அர்ப்
பணிப்புகளும் எங்கள் விடு
தலைப் போராட்டத்தை
வளர்ந்த நிலைக்குக் கொண்டு
ன்றன இங்கு நாம் இன்று
ச்சமின்றி நிமிர்ந்து நிற்கின்
றோம் என்றால் அதற்குக்கார
ம் தம் வாழ்வை இந்த மண்
ணின் வாழ்வுக்காக அர்ப்
பணிப்புச் செய்த போராளி
களாகும்.

இந்த மண்ணை நேசித்த
போராளிகளால் அவர்களின்
யாகங்களால் தான் இன்று
இந்தமண் உயர்ந்து நிற்கிறது.
ம் விலகத்தக்க வாழ்வு
டுள்ளது. தமிழன் வாழ்வை
ந்த இந்த மண்ணுக்கு
ழ்வு தேடித்தந்த அந்த மாவீ
களின் நிழலிலே தான் நாம்
ங்கு கூடுகிறோம், பள்ளும்
ணியும் பாடுகிறோம்.

## காட்டியாவோம்

ந்தத்தலைவனின் காலத்தி
லே நாம் விரும்பும் புனித
மை நிர்மாணிப்போம்.



## போராட்டத்திற்கோர் உந்துசக்தி



இங்கு கேட்கும் ஒவ்வொரு ஒலியும், நாதமும், பேச்சும் எம்மோடிருந்து எம்மை விட்டுப்பிரிந்த போராளிகளின் உயிர்த்துடிப்புக்கள்.

இந்த மண் வாழவேண்டும். இந்த மக்கள் வாழ வேண்டும் என்றே போராளிகளும் பொதுமக்களும் தமது உயிர்களை அர்ப்பணித்து இப்போராட்டத்தை வளர்த்தனர்.

தமிழீழத்தின் உயிர்நாடி மக்கள். மக்களின் உயிர்நாடி தமிழ். இந்த தமிழ்மண் மீட்பு உலகிற்கே வழிகாட்டவுள்ளது.

தலைவரைப்பற்றிய பல வதந்திகளை நம்பியவர்கள் பலர் உள்ளனர். கேள்விகள் எழுப்பியவர்களும் பலருண்டு, அவர்களுக்கு நாம் கூறுவது புலிகள் ஒரு குடும்பத்தினர் என்பதை மறந்து விடாதீர்கள். இந்தக் குடும்பம் எங்களை மீட்கவே போராடும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இல இராணுவத்தினரைக் கொன்றபின் சாவோம் என இப்போராட்டத்தில் இணைந்த எமக்கு இப்போராட்டம் பலவற்றைக் கற்பித்துள்ளது.

இந்த விழாவையும் மக்களையும் பார்க்கும்போது எமது போராட்டத்திற்கோர் உந்து சக்தி ஏற்படுகிறது.

## ஈழமே எங்கள் தாயகம்

ராகம்: காம்போதி — தாளம்: ஆதி

பல்லவி

ஈழமே எங்கள் தாயகம் — தமிழ்
ஈழமே எங்கள் தாயகம்!

அனுபல்லவி

ஏழு மாகடல் மீதிலும் — கலை
ஏறிடும் இது சொல்வோம் — தமிழ்

(ஈழமே)

சரணங்கள்

கண்ணைக் காக்கும் இமைகள் போல
களத்தில் நிற்கும் வேங்கைகள் — போர்க்
களத்தில் நிற்கும் வேங்கைகள்
மண்ணைக் காப்பர் மானம் காப்பர்
மனத்தில் நிற்கும் வேங்கைகள் — மக்கள்
மனத்தில் நிற்கும் வேங்கைகள்

(ஈழமே)

குனிந்து பணிந்து தொழும்பு செய்தே
கனிப் போன தமிழரை
துணிந்து மீட்க நிமிர வென்றி
தொடங்கி விட்ட வேங்கைகள்

(ஈழமே)

பொங்கு இன்ற தமிழனே — களம்
புகுந்து சாதனை புரிவடா!
சங்கெடுத்து முழங்கடா — புதுச்
சரித்திரத்தை வழங்கடா!

(ஈழமே)

— நம்பியாரூரன்


இன்பத் தமிழின் இதமார் திருநாள்
ஈழமணி எழிலுறும் இனிமைப் பெருநாள்
எங்கள் தாயகம் ஏற்றிடும் நன்னாள்
ஏற்றமே சொல்லும் முத்தமிழ் முழுநாள்

முத்தமிழ் விழாவுக்கு எமது வாழ்த்துக்கள்

**புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம்**
("எழிலகம்" முன்பாக)
யாழ்ப்பாணம்.




முத்தமிழ் விழா இனிது நிறைவேற
எமது நல்லாசிகள்

சகல விதமான பலசரக்குப் பொருள்களையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும், பாடசாலை உபகரணங்களைப் பெறவும் இன்றே நாடுங்கள்

**அரன்ஸ்**
இல. 100, அரசடி வீதி
யாழ்ப்பாணம்

★ அபிஷேகச்சாமான்கள் ★ மருந்துச்சரக்குகள்
★ ஆயுர்வேத மருந்துகள் ★ வாசனைத்திரவியங்கள்
ஆகியன பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

**க. சே. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
மருந்துச் சரக்கு வியாபாரம்
2-ம், ஒழுங்கை, இல. 4, பலாலி வீதி
யாழ்ப்பாணம்

சூழ் கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத் துலங்குக வையகமே!

பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள் ஈழத்துச் சஞ்சிகைகள், வாழ்த்து மடல்கள், கலண்டர்கள், டயறிகள், பஞ்சாங்கங்கள், இந்திய நாவல்கள், இலக்கியப் புத்தகங்கள், பத்திரிகைகள் என்பனவற்றை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
4A. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
★ புத்தகங்கள் அழகான முறையில் கட்டிக் (பைண்டிங்) கொடுக்கப்படும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"
திருமண, பிறந்த நாள் மற்றும் மங்கள வைபவங்களுக்குத் தேவையான எந்த வகையான சிற்றுண்டி வகைகளும், உணவு வகைகளும் ஓடர் செய்து உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்,**
19/3, கொழும்புத்துறை சாலை, (மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை) சுண்டிக்குளி
★ சிறப்பான உணவுப் பார்சல்கள் ரூபா 25 மட்டுமே ★

உங்கள் இல்லத்தரசியின் மனை சிறக்க தேவையான பொருள்களை வாங்கிச்செல்ல ஒரு முறை நாடுங்கள்

**ஜெசித்தாரா பல்பொருள் அங்காடி**
3A, கொழும்புத்துறை சாலை (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிரில்)
சுண்டிக்குளி.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்

# முத்தமிழ் விழா

## பத்தாம் நாள் நிகழ்ச்சிநிரல்

இடம்:- யாழ்ப்பாணம் மாவீரர் கலையரங்கம்
நாள்:- 16.06.1991 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- பி. ப. 5.30 மணி.

☐ மங்கள இசை

நாதஸ்வரம் - திரு. என். கே. பத்மநாதன்
திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி
திரு. வீ. கே. பஞ்சமூர்த்தி

தவில் - திரு. என். ஆர் சின்னராஜா
திரு ரி உதயசங்கர்
திரு. என். ஆர். புண்ணியமூர்த்தி
திரு. ஆர். எஸ். சுதாகரன்

☐ விடுதலைப் புலிகளின் சிறப்புரை

☐ சிறப்புரை

☐ நாடகம்

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரின் "கொடியவரின் கொடுமை" நாட்டிய நாடகம்

☐ இசைக்கச்சேரி

திரு. பொன். சுந்தரலிங்கம் — பாட்டு
திரு. ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
செல்வன் கே. கண்ணதாசன் — கடம்
செல்வன் கே. துரைராஜா — கஞ்சிரா

☐ நாடகம்

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும் "உயிர்த்து வந்த மனிதர் கூத்து"

☐ மெல்லிசை நிகழ்வு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் "போர்க்களப் பாடல்கள்

# இந்திய தேர்தல் பணிகள் பூர்த்தி
# வாக்குகள் எண்ணிக்கை ஆரம்பம்

தமிழ்நாடு உட்பட ஏழு மாநிலங்களிலும் புதுச்சேரி யூனியனிலும் நடைபெற்ற நேற்றைய தேர்தலுடன் இந்திய தேர்தல் பணிகள் முடிவடைந்துள்ளன.

தமிழகத்தை பொறுத்த வரையில் அறுபது வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் சென்னை நகரப்பகுதியிலும் கன்னியாகுமரியிலும் மந்தமாகவே வாக்குப்பதிவு இடம் பெற்றுள்ளது. தமிழகத்தில் பெண்களே அதிகமாக வாக்களித்துள்ளனர்.

சிலபகுதியில் குடிநீர்வசதி, போக்குவரத்து வசதி செய்து தரப்படவில்லை என வாக்களிக்க மறுத்துள்ளனராம்.

இதேவேளை ஆந்திரப் பிரதேசத்திலும் உத்திரப் பிரதேசத்திலும் வன்முறைகள் இடம்பெற்றதில் மூவர் பலியாகினர். ஆந்திராவில் நக்ஸலைட்டுகள் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் கான்ஸ்டபிளும், மூதாட்டி ஒருவரும் பலியாகினர். உத்தரப் பிரதேசத்தில் இந்து முஸ்லிம் கலவரம் ஏற்பட்டது.

வாக்குகள் இன்று காலை முதல் எண்ண ஆரம்பிக்கப்படும். வாக்குகளின்படி கட்சிகளின் கடைசி நிலவரங்களை உடனுக்குடன் அறிவிக்க இந்திய வானொலி ஒழுங்குகளைமேற்கொண்டுவருகிறது.

## ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் அனுப்பப்படுவதில்லை

யாழ் மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளினால் நடாத்தப்படும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் ஆயுர்வேத மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லும் நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

நாவின்ன என்ற இடத்தில் ஆயுர்வேத திணைக்களத்தால் தயாரிக்கப்படும் மருந்துகள் யாழ் மாவட்ட ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வந்தன கடந்த ஆண்டு யூன் மாதம் யுத்தம் மூண்டதை படுத்து இந்த மருந்துகள் இங்கு வரவில்லை.

தற்போது கப்பல் மூலம் யாழ் மாவட்டத்திலுள்ள அரச ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் அனுப்பிவைக்கப்படுவதுபோல ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகளை எடுப்பிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆயுர்வேத ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் அரசாங்க ஆஸ்பத்திரிகள் இல்லாத இடங்களில் உள்ள மக்கள் ஆயுர்வேத வைத்தியசாலைகளையே நாடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. 33

### செட்டிகுளம் உ. அ. அ. பிரிவில்
## தமிழ்க் கிராமங்களுக்கு இது வரை நிவாரணம் இல்லை

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாவற்குளம் 4ஆம் யூனிற் 5ஆம் யூனிற், கந்தசாமி நகர், குருக்களபுதுக்குளம், பெரியதம்பனை போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு கடந்த மார்ச் மாதத்துக்குப்பின்னர் எந்தவித நிவாரணப் பொருள்களோ அல்லது பங்கீட்டு உணவுப் பொருள்களோ இதுவரை விநியோகிக்கப்படவில்லையென அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் இப்பகுதி மக்கள் பெருங்கஷ்டநிலையை அடைந்துள்ளதாகவும் ஏனைய கிராமங்கள் வெறிச்சோடிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளுக்கு வவுனியாவில் இருந்தே உணவுப் பொருள்கள் எடுத்துவரப்படுவதால் இராணுவத்தினர் அனுமதி வழங்காததே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. 33

## பலாலி தெற்கு பிரிவு மக்கள் நிவாரணப் பதிவு செய்யவேண்டும்

பலாலிதெற்குகிராமசேவையாளர் பிரிவில் இருந்து வெளியிடங்களில் தங்கியிருப்போர் தங்கள் உலர் உணவு அட்டை, குடும்பப்பதிவு அட்டை, உணவு முத்திரைகள் ஆகியவற்றையும் கொண்டு புதிய நிவாரணப் பதிவுக்காக இன்று 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை சுன்னாகம் பெரிய மதவடியில் உள்ள கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8 மணி முதல் பகல் 12 மணிவரையும் அலுவலகத்திலும் நண்பகலுக்குப் பின் ஆவரங்கால் சிவன் வீதியில் உள்ள கிராமசேவகர் இல்லத்திலும் பதிவு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பதிவுகள் இல்லாதவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் கிடைக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 33

## நன்றி நவிலல்

29-04-91இல் ஆனையிறவில் இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த லெப்டினன் ஆனந்தன் (கமலநாதன்) அவர்களின் மரணச் சடங்கிலும் 13-06-91இல் நடைபெற்ற அந்தியேட்டி கிரியையிலும், கலந்து கொண்டும், அனுதாபம் தெரிவித்தும் சகலஉதவிகளும் புரிந்த அனைவர்க்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தவர்கள்,

மட்டுவில் நாடு கிழக்கு,
பூநகரி
14-06-91. 06057

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

பெற்றோர்களை இழந்தவர்களும், அங்கக் குறைவானவர்களும், வலுவிழந்தவர்களும் தமிழ், ஆங்கிலத் தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கில மொழி ஆகியன இலவசமாகப் பயில விரும்பின் 30.06 1991க்கு முன் விண்ணப்பிக்கவும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

78, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
14-06-1991 06060

குடாநாட்டில்...

குறிக்கப்பட்ட கிராம மக்களைப்பெரிதும்கவர்ந்தது யாழ் நகர் மின்னொளியினால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலமாக காட்சியளித்தது. 79 74

விடுதலையை...

எமது மண்ணை விட்டு ஓடும் வகையில் எதிரி விமானத் தாக்குதலையும், எறிகணைத் தாக்குதலையும் மேற் கொண்டுவருகின்றான். எனினும் எமது மக்கள் போராட்ட உணர்வில் பற்று வைத்திருக்கிறார்கள் என்பதை இந்த விழாவிற்கு வந்த மக்களின் தொகையில் இருந்து காணக் கூடியதாகவிருக்கிறது எனத் தெரிவித்தார்.

கடந்த கால போராட்ட வரலாற்றில் எமது பாரம்பரிய சொத்துக்களான பல கட்டடங்களும் நூல் நிலையங்களும் எதிரிகளால் நாசமாக்கப்பட்டதுடன் கலை, பண்பாடு, மொழியையும் அழிக்க பல வழிகளில் சிங்கள அரசு தற்போதுமுனைந்து நிற்கின்றது,

இங்கு இப்போது தொடர்ந்து தங்கியுள்ள மக்கள் இந்தப் போராட்டத்தில் இந்த மண்ணின் மீதும் கொண்ட பற்றினாலேயே இருக்கிறார்கள். எல்லைகள் பிடிக்கப்படவேண்டுமானால் ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் எம்முடன் இணைய வேண்டும்.

எமது இலட்சியத் தலைவர் பிரபாகரனின் முயற்சியே கலைபண்பாட்டுவளர உற்சாகம் அளிக்கின்றது. இதனாலேயே தலைவர் பிரபாகரன் அவர்கள் சாவகச்சேரியில் இடம் பெற்ற முத்தமிழ் விழாவில் மாமனிதர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார் என்றார். ம 11, 74, 79

### மட்டக்களப்பு பிரமுகர்கள் கண்டனம்
## பூர்வாங்க விசாரணைகளை பாதுகாப்பு அமைச்சு நடாத்தும்!

கொக்கட்டிச்சோலை படுகொலைகள் குறித்து பூர்வாங்க விசாரணைகள் நடாத்தும் முகமாக அரசின் விசாரணைக்குழு வொன்று மட்டக்களப்பு சென்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் சட்ட ஆலோசகர் ஜயலத் தலைமையில் செல்லும் மூவர் கொண்ட பாதுகாப்பு அமைச்சின் தூதுக்குழு படுகொலை குறித்து விசாரித்து தனது இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் வழங்கும்.

இதனிடையே இராணுவம் நடாத்திய கொலையை விசாரிக்க இராணுவத்தரப்பே நியமிக்கப்பட்டது குறித்து மட்டக்களப்பு பிரமுகர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

## வெங்காயம், பருப்பு, மிளகாய் தனியாரும் இறக்குமதி

வெங்காயம், செத்தல் மிளகாய், பருப்பு என்பவற்றை இறக்குமதி செய்யும் உரிமை தனியார்துறையினர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது இவற்றை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் இறக்குமதி செய்துவருகிறது.

தனியார்துறையினருக்கான இப்புதிய அனுமதித்திட்டம் அடுத்தமாதம்அல்லது ஆவணி மாதம் அமுலுக்கு வரவுள்ளதாகத் தெரியவருகிறது. 33

ஹோம் பினான்ஸ்...

இவர்கள் தற்போதைய முகவரி தமது நிவாரண விண்ணப்பங்களின் மத்திய வங்கியின் தொடர்பு இலக்கம் என்பவற்றை அனுப்பிவைக்குமாறு ஹோம் பினான்ஸ் கம்பனி அறிவித்துள்ளது.

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட் மூன்றாம் மாடி, வேவநிட் கட்டடம், 463, காலி வீதி, கொழும்பு - 3 என்ற முகவரிக்கு இந்த விபரங்களை அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. 33

ஷெல்...

கடற்கரை யோரப்பகுதிகளையும் அராலித்துறையையும் நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கடந்த சில தினங்களாக இப்பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. 79

ஆனையிறவு...

இதே சமயம் பலாலி முகாமிலிருந்தும் விமானநிலையத்திலிருந்தும் ஷெல் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

அரசின்...

பற்றித்து எம். எஸ். எப். தனது பணிகளை இடைநிறுத்தியது.

தாக்குதல் நடாத்தப்பட்டது குறித்து அரசின் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வரும்வரையில் பிரெஞ்சுக்குழு தனது நடவடிக்கைகளை நிறுத்திவிருந்தது. தெரிந்ததே.

அரச ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை குறித்து கருத்து வெளியிடுகின்ற எம். எஸ். எப். அரசின் இம்முடிவு குறித்து தாம் அதிர்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி "லக்ஷ்மி" பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 16. 06. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.